## வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி - 2016

-----------------------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக கருதப்படுகின்ற மீளாய்வாண்டின் செயற்படு நிலை தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர்கள் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக் ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியைத் தாபித்தலும் கம்பனியின் உரித்தும்

வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனி 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்குரிய வியாபார நிறுவனம் பொதுக் கம்பனியாக மாற்றம் செய்யும் சட்டத்தின் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் உள்ள கம்பனியாக இருந்ததுடன் 2007 இன் 07 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியாக இருந்ததுடன் கம்பனியின் தனிப்பட்ட பங்கு உரிமையாளராக திறைசேரியின் செயலாளர் இருக்கின்றார்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 30,239,420 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

கம்பனியால் எதிர்கால பின் சேவை நலன் பொறுப்புக்களின் அடிப்படையில் ஏற்படுகின்ற ஆபத்துக்களைக் குறைப்பதற்காக திட்டமிடப்பட்டு சொத்துக்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டிற்குரியதாகக் கிடைத்த ரூபா 310,049 தொகையான குத்தகை வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கம்பனியால் அரசாங்கத்தின் பல்வேறு நோக்கங்களுக்காக விடுவிக்கப்பட்ட 1750.88 ஹெக்டேயர் காணிக்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 138,979,605 தொகை குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியிலிருந்து மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு அறவிடவேண்டியதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு ரூபா 19,051,007 தொகை எதிர்காலத்திற்கு மேற்கொள்ளப்பட்ட குத்தகை வட்டிக் கொடுப்பனவொன்று காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|---|
| (அ) | விடுவிக்கப்பட்ட ஹெக்டேயர் காணி | 550.88 | 16,214,000 | காணி விடுவிப்பு பதிவேடு |
| (ஆ) | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட ஹெக்டேயர் காணி | 6722 | 189,137,238 | காணிகளுக்குரிய நிலவரைபடம் மற்றும் உறுதிப்படுத்தல் பதிவேடு |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் பதனிட்ட தேங்காய் ஏலவிற்பனைக்கான விதி இலக்கம் 21 இன் பிரகாரம் தேங்காய் பொதிகளைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளரினால் செலுத்த வேண்டிய பணம், 35 கலண்டர் நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 03 வாடிக்கையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட 51 தேங்காய் இருப்புக்களுக்காக அறவிடவேண்டிய ரூபா 2,205,284 தொகையை அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் முதல் கனிஷ்ட நிலையின் முகாமையாளர்கள் வரை உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,626,657 தொகை ஊழியர் படியாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய படிகளைச் செலுத்துவதற்காக சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் சிபாரிசு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1995 யூலை 21 ஆந் திகதிய எஸ்ஏஜ/ஏ/4/34 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரால் விநியோகிக்கப்பட்ட அரசாங்க காணி கையளித்தல் தொடர்பான வழிகாட்டி கடிதத்தின் 8(அ) பிரிவு | நீண்டகால வாடகை உடன்படிக்கையின் கீழ் அரசாங்கத்தின் காணி கையளிப்பின் போது திருத்தப்பட்ட வாடகைப் பணம் முன்னர் தீர்மானிக்கப்பட்ட வாடகைத் தொகையில் 150 சதவீதத்திற்கு குறையாத வகையில் 5 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், வருடாந்த வாடகை ரூபா 871,110 தொகையான 07 ஆதனங்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் ஆரம்ப வாடகைத் தொகையின் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 126,577,293 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 155,115,879 ஆனமையின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 28,538,586 தொகையான வீழ்ச்சியைக் காண்பித்தது. மீளாய்வாண்டில் தேங்காய் வருமானம் ரூபா 28,452,724 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 177,266,345 தொகையான மிகை வருடாந்தம் தளம்பலடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 126,577,293 ஆக இருந்தது. எனினும், நிதி விளைவுகளுக்கு அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 282,739,524 தொகையான கம்பனியின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 351,279,723 வரை சீராக அதிகரித்திருந்த போதிலும் மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 275,688,962 வரை குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் விரிவான வருமானக் கூற்றுக்களை ஒப்பீடு செய்யும் போது பின்வரும் அவதானிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2,572,329 தேங்காய்களினால் அதிகரித்திருந்த போதிலும், சராசரியான விற்பனைப் பெறுமதி 6.50 சதவீதத்தால் குறைவடைந்தமையின் காரணமாக செயற்பாட்டு வருமானத்தை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 04 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) நுகரக்கூடிய உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்களின் சந்தைப் பெறுமதியை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 24,436,263 இனால் குறைவடைந்தமையின் காரணமாக மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 21 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இறப்பர் உற்பத்தி கிலோகிராம் 3,698 இனால் குறைவடைந்திருந்த போதிலும், உற்பத்திக் கிரயத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 23 சதவீதத்தால் அதிகரித்தமையின் காரணமாக கம்பனியின் இறப்பர் உற்பத்தியிலிருந்து கிடைத்த பங்களிப்பு மேலும் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம், இறப்பர் உற்பத்தியிலிருந்து கிடைத்த பங்களிப்பை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 15,037,482 இனால் அதாவது 638 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் 2014 ஆம் ஆண்டின் போது 43 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த இலாப விகிதம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே 36 சதவீதம் மற்றும் 32 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்களில் குறுங்கால முதலீடாக ரூபா 450,000,000 காண்பிக்கப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டின் போது அது 415,000,000 ஆக காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் போது நடைமுறை மற்றும் விரைவு விகிதம் முறையே 7 மற்றும் 6.7 மற்றும் ஆக இருந்தன. இதன் பிரகாரம் கம்பனி மிகை தொழிற்படு மூலதனத்தை பேணிச் சென்றமை அவதானிக்கப்பட்டதுடன் அது குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் அவற்றை நீண்டகால உயர் நலன்களை பெறக்கூடிய முதலீட்டு வழிகளில் முதலீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இயற்கையான, பௌதீக மற்றும் மனித வளங்களின் சமூகப் பொறுப்புக்களை உடையதாகக் கொண்ட பெருந்தோட்ட மற்றும் ஏனைய விவசாய தொழில் முயற்சிகளை ஆக்கபூர்வமானதாகவும், நிலைபேறானததாகவும் முகாமைத்துவம் செய்து நலனாளிகளினதும், ஒட்டுமொத்த நாட்டினதும் உன்னத நிலைக்காக செயற்படுதல் கம்பனியின் நோக்கமாக இருந்தது. மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் மணல் மற்றும் மணல் மண் விற்பனை செய்யும் போது நலனாளிகளினதும் ஒட்டுமொத்த நாட்டினதும் அபிலாசைகளைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 தோட்டங்களில் காணப்பட்ட 1500 கியூப் மணல் மற்றும் பெருந்தோட்டத்தில் காணப்பட்ட 4500 கியூப் மணல் மண் என்பவற்றைக் கேள்வி கோரும் போது உரிய இடங்களில் காணப்பட்ட மணல் மற்றும் மணல் மண் கியூப் அளவினை கணிப்பிடுவதற்காக உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உதவி பெறப்படாதிருந்ததுடன் உரிய தோட்டத்தின் தோட்ட அதிகாரியின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் கேள்விக் குழுவினால் கேள்வி கோரி மணல் மற்றும் மணல் மண் பல்வேறு விலை வீச்சின் கீழ் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ii) தொடம்கஸ்வந்த தோட்டத்தின் நடுவில் வழிந்தோடிச் செல்கின்ற சிறிய ஆற்றிலிருந்து ஆற்று மணல் எடுத்துக் குவித்தல், கம்பனியின் அனுமதியின்றி ஏனைய தரப்பினர்களால் மேற்கொள்ள முடியாதிருக்கும் போது, அரசியல் அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் மணலைக் கரையில் குவிப்பதற்கு கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தோட்ட அதிகாரிகளின் மதிப்பீட்டின் அடிப்படையில்

2000 கியூப் மணலிற்கான போக்குவரத்துக் கட்டணமாக ஒரு கியூபிற்கு ரூபா 800 மாத்திரம் அறவிடுவதற்கு கம்பனி தீர்மானித்திருந்தது.

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் பிரகாரம் மாதமொன்றிற்கு எடுத்துக் குவிக்கக் கூடிய மணல் கியூப்பின் அளவு 25 கியூப்பிற்கு வரையறுக்கப்பட்டிருந்த போதும், குருணாகல் தோட்டத்தில் காணப்பட்ட 171 மணல் கியூப்கள் 2017 ஆம் ஆண்டின் 1½ மாதத்தில் குவித்து வைப்பதற்கு கம்பனி இடமளித்திருந்தது.

(ஆ) தொடன்கஸ்வந்த தோட்டத்தில் விவசாய பயிர்ச் செய்கைகளின் விளைச்சல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனியின் கொள்வனவின் பிரகாரம், 30 நாட்களுக்கு ஒரு தடவை தேங்காய் அறுவடை செய்ய வேண்டியிருந்த போதிலும், தொடன்கஸ்வந்த தோட்டத்தில் 37 – 60 நாட்களுக்கிடையிலான காலத்தில் தேங்காய் அறுவடை செய்யப்பட்டதன் காரணமாக தேங்காய்களின் சதவீத 24 சதவீதம் பெறுமைதியைக் கொண்டிருந்தது.

(ii) ஹெக்டேயரொன்றில் வைக்கப்பட வேண்டிய அனுமதிக்கப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை 158 ஆக இருந்த போதிலும், தோட்டத்தில் காணப்பட்ட வேண்டிய மரங்களின் அளவை விட 17 சதவீதம் குறைவாக தென்னை மரங்கள் பயிரிடப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட அளவு வரை மரங்களை நடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) தேங்காய் கைத்தொழிலின் அங்கீகாரத்தின் பிரகாரம் மரமொன்றின் வருடாந்த சராசரி விளைச்சல் 72 தேங்காய்களாக இருக்க வேண்டிய போதிலும், தோட்டத்தில் இந்த அளவு 29 இற்கும் 61 இற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

(iv) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப வெளியீடுகளின் படி பச்சை மிளகாய் கண்றொன்றின் சராசரி விளைச்சல் காய்ந்த மிளகாய் கிலோகிராம் 1.5 இற்கும் 2.0 இற்கும் இடையிலான அளவாகும். அதன் பிரகாரம் தோட்டத்தில் காணப்பட்ட கன்றுகளின் அளவின் -பிரகாரம் பச்சை மிளகாய் கிலோ கிராம் 15107 விளைச்சல் அடையப்பட வேண்டியிருந்த போதிலும், தோட்டத்தில் அண்ணளவாக கிலோகிராம் 2,685 விளைச்சல் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

1992 ஆகஸ்ட் 18 ஆந் திகதி மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிலிருந்து கம்பனிக்கு கையளிக்கப்பட்ட 6772 ஹெட்டேயர் காணியில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஏனைய நோக்கங்களுக்காக பல்வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட காணியின் அளவு 1750.88 ஹெக்டேயராக இருந்ததுடன் அதற்காக அமைச்சினதும், திறைசேரியினதும் அங்கீகாரம் கிடைத்திராத போதும், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்குச் செலுத்த வேண்டிய குத்தகை செலுத்துதலை நிறுத்துவதற்கு கம்பனி தீர்மானித்திருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் பயிர் செய்யப்பட்ட உப பயிர்ச் செய்கையில் முதிர்ச்சியடையாத பயிர்ச்செய்கையிலிருந்து முதிர்ச்சியடைந்த பயிர் வரை மாற்றுவதற்குரிய கால வீச்சு கம்பனியின் உள்ளகக் குறிப்புக்களின் (Internal & Memorandam) மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 8,159,210 பெறுமதியான பயிர்ச் செய்கை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முதிர்ச்சியடைய வேண்டிய காலம் கடந்திருந்த போதும், அந்தப் பயிர்கள் முதிர்ச்சியடைந்த பயிர்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டுகம்பொல தோட்டத்தில் அமைந்துள்ள மயிட்டா ஆய்வுகூடத்தில் எதிர்ப்பு மய்ட்டா அடங்கியுள்ள 2,509 பக்கற்றுக்கள் (Packet) 2017 மார்ச் 09 இல் உள்ளவாறு மய்ட்டாறோங் ஒழிப்பதற்காக பயன்படுத்தப்படுவதுடன் இவை எந்தத்திகதியில், எந்தத் தொகுதிக்குரிய பக்கற்றுக்கள் என உறுதிப்படுத்துவதற்குரிய பக்கற்றுக்கள் என உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள், குறித்த அப்பக்கற்றுக்களில் குறிப்பிடப்படாமையின் காரணமாக மய்ட்டா பக்கற் இருப்புக்கள் பாவனைக்கு எடுக்க முடியாத காலாவதியானதா என கணக்காய்வில் வெளிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) கம்பனியின் தெங்குப் பயிர்களில் மய்ட்டா ஊடுவியிருக்கும் போது 2016 நவம்பர் 04 ஆந் திகதியின் பின்னர் கட்டுகம்பொல மய்ட்டா ஆய்வு கூடத்தில் எதிர்ப்பு மய்ட்டா தயாரிக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது. தோட்டத்தில் மய்ட்டா ஊடுருவும் முறைமை பரவியுள்ள சந்தர்ப்பத்தில் 04 மாதங்களுக்கு அண்மித்த காலமொன்று எதிர்ப்பு மய்ட்டா உற்பத்தி செய்யப்படாமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டு முதல் நியதிச்சட்ட ஏற்பாடாக தனியார் தரப்பினருக்கு வழங்குவதற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருந்த கட்டுகம்பொல தோட்டத்தின் லக்ஷ்மி தோட்டப் பிரிவிற்குரிய 40 ஏக்கர் காணி பல வருட காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பேணப்பட்டிருந்தது.

(ஆ) கட்டுகம்பொல தோட்டத்திற்குரிய கித்துலகெலே பிரிவு எல்லையில் தாபிக்கப்பட்ட கருங்கல் கம்பனியின் அனுமதியின்றி நீண்ட காலமாக வெளித்தரப்பினரால் அகற்றப்பட்டுக்கொண்டிருந்ததுடன் தோட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிலத்திலும் உரிய கருங்கல் உடைத்தலின் மூலம் தோட்ட எல்லைக்கு ஏற்படுகின்ற பாதிப்பிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது தோட்ட நிலத்தை பயன்படுத்துவதற்குரிய வாடகைப் பணத்தை அறவிடுவதற்கோ கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கபட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 252 மற்றும் 228 ஆக இருந்தனர். அதன் பிரகாரம் கம்பனியின் தோட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நேரடியாக பங்களிக்கின்ற நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் 14 பதவிகளை உள்ளடக்கிய மூன்றாம் மட்டத்தில் 26 பதவிகளும், இரண்டாம் மட்டத்தில் 03 பதவிகளும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப மட்டத்தில் 05 பதவிகளில் மிகையும் காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் கம்பனியின் தலைவரினது கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் முறைமையின் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம் | பல்வேறு நோக்கங்களுக்காக கம்பனியின் காணியை விடுவித்தல் தொடர்ச்சியாக இடம் பெற்றமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டின் மூலம் இலக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை அடைந்துகொள்ளும் செயற்பாடுகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டமை |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்ட கால கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | தொழிலாளர்களில் கணிசமான அளவினரின் வயது 50 வருடங்களுக்கு மேற்பட்டிருந்தமையின் காரணமாக எதிர்காலத்தில் தொழில்ளாளர்களை ஆட்சேர்க்கும் ஆபத்தொன்று காணப்பட்டமை |
| (உ) | பெருந்தோட்ட முகாமைத்துவம் | தென்னை மரத்திலிருந்து கிடைக்கின்ற விளைச்சல் குறைவடைந்தமை, மீள் தென்னை பயிர்செய்கைத் திட்டம் அமுல்படுத்தப்படாமை, விஞ்ஞான ரீதியான அடிப்படையில் தென்னை உரம் பயன்படுத்தாமை மற்றும் உப பயிர்க் கன்றுகள் அழிவடைந்து சென்றமை |